# திருநாவாய்- ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)



ஆசிரியர்:

ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்



நன்றி:

1.ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நாராயணன் ஸ்வாமி - தமிழ் மற்றும் ஸம்ஸ்க்ருத தட்டச்சு உதவி

2. www.anudinam.org - படங்கள் உதவி

3. சௌ. ஸ்வேதா ஸுந்தரம் - மின்புத்தகத் தொகுப்பு





CONTENTS


| | |
|---|---|
| ஆசிரியர் முன்னுரை | 1 |
| திருநாவாய் திவ்ய தேசம் | 3 - 6 |






Naavai Mukundhan ( Courtesy: Anudinam.org )



ஸ்ரீ:

# திருநாவாய் - ஆழ்வார்கள் அனுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)

******

****

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம்..

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த பொழுது 1992 மார்ச் தொடங்கி 1993 செப்டம்பர் வரை பல வெளிநாடுகளுக்கு பயணித்திருந்த வேளைகளில் பகவத் சிந்தனை விடாமலிருக்க, 108 திவ்ய தேசங்களைப் பற்றி வேத, வேதங்கங்கள், ஆழ்வார் அருளிச்செயல்கள், ஆசார்ய ஸ்ரீஸூக்திகளில் கொண்டாடப் பட்டிருக்கும் விதங்களை பற்றி எழுந்த கருத்துக் கோவைகளை ஒரு நூல் வடிவமாக எழதியது இன்றும் பசுமையாக மனதில் நினைவிருக்கிறது.

பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்போது அந்த நூலில் இருந்து ஒரு பகுதியாக, மலையாள நாட்டு திவ்ய தேசமான திருநாவாய் பற்றி ஆழ்வார்களின் மங்களாசாஸனங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாச்சாரி சடகோபன்





Taramani Srinivasa Perumal Temple Paramapada Nathan Sevai ( Courtesy: Anudinam.org )



ஸ்ரீ:

# திருநாவாய்- ஆழ்வார்கள் அனுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)

ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )

*****

## மலைநாட்டு திருப்பதிகள்: திருநாவாய்

ஷோரனூர் - கோழிக்கோடு மார்க்கத்தில், திருநாவாய் ஸ்டேஷன் அருகில், பாரதப்புழா நதிக் கரையில் இந்த திவ்ய தேசம் உள்ளது. இங்கு நாவாய் முகுந்தன் என்ற ஸ்ரீமந் நாராயனன், மலர்மங்கை நாச்சியாருடன் ஸேவை தருகிறார். இந்த திருப்பதி ஸமீபம் திருவஞ்சிக்குளம் என்ற கிராமம் உள்ளது. இங்கு குலசேகர ஆழ்வார் அவதரித்தார். நின்ற திருக்கோலத்தில் ஸேவை தரும் பெருமாளை திருமங்கை ஆழ்வாரும், நம்மாழ்வாரும் 13 பாசுரங்களால் மங்களாஸாசனம் செய்துள்ளார்கள்.

திருமூழிக்களத்து எம் பெருமானை பாடிப் போற்றிய பராங்குச நாயகி, அவன் வரவு கிட்டாமல், நாவாய் (மரக் கலம் - படகு) போல், ஸம்ஸார ஸாகரத்தை கடக்க உதவும் ஸ்ரீமந் நாராயணனை அணுகப் பெறும் நாள் என்றோ எனக் கதறினாள். மலைமகளோடும், நிலமகளோடும் கூடிய ஸ்ரீமந் நாராயணன் கோயில் கொண்டுள்ள திருநாவாயை என்று அணுகுவேன் எனக் கதறினாள். நாவாய் நெருங்கும் நாட்கள் கிட்டவில்லையே என நினைத்து, தாரை, தாரையாக கண்ணீர் விட்டுக் கொண்டு பராங்குச நாயகி நின்றாள். “திருநாவாய் வாளேய் தடங்கண் மடப்பின்னை மணாளா! மீளாவடிமைப் பணி செய்யப் புகுந்தேன்”. அந்த கைங்கர்ய பாக்யம் கிட்டும் நாட்கள் எப்போது என்று தெரியவில்லையே எனக் கூறி நாயகி புலம்பினாள். உன்னைக் கண்டு களிக்கின்ற தினம் எப்போது என நினைத்து, கண் படைத்தவனை நொந்து கொண்டு நான் நிற்கிறேன் என்று பின் வருமாறு சொன்னாள்:

மணாளன் மலர்மங்கைக்கும் மண் மடந்தைக்கும்,

கண்ணாளன் உலகத்துயிர் தேவர்கட்கெல்லாம்,

விண்ணாளன் விரும்பியுறையும் திருநாவாய்,

கண்ணாரக் களிக்கின்றதிங்கென்று கொல்கண்டே.

பரமபதத்தில் வைகுண்ட நாதனாக அரசாளும் பெருமான் வாஸம் செய்யப் பெற்ற திருநாவாய் திருப்பதியை இந்த பூத உடலில் இருக்கும் போது, கண்கள் திகட்டும் வரை நான் எப்போது ஆனந்திக்கும் பாக்யம் கிடைக்கும் என பராங்குச நாயகி கேட்டாள்.



திருநாவாய் பற்றியப் பாசுரங்கள் அத்புதமான சுருக்கமும், அழகும் கொண்டவை. ஏழாவது பாசுரம் இந்த பத லாலித்யத்திற்கும், நம்மாழ்வாரின் பக்திக்கும் உதாரணமாக விளங்கும். பாசுர வாக்யங்கள் பின் வருமாறு:

கோவாகிய மாவலியை நிலங் கொண்டாய்,

தேவாசுரஞ் செற்றவனே! திருமாலே!

**நாவா யுறைகின்ற என் நாரணன் நம்பீ!**

**ஆவாயடி யான் இவனென்றருளாயே.**

திருநாவாயில் உறையும் கல்யாண குண பூர்த்தி உடைய நாரணன் நம்பியே! அரசனாக இருந்து, அஹங்காரம் கொண்டிருந்த மஹா பலியை, மூன்றடி நிலம் கேட்டு, அவன் ராஜ்யங்களை எல்லாம் தன் வசமாக்கிய த்ரிவிக்ரமா!



சூளைமேடு ஏகாதசி த்ரிவிக்ரம அலங்காரம் (Courtesy: Anudinam.org )



உனது பிரிவால் துயர் கொண்டு கலங்கி இருக்கும் அடியேனாகிய என்னை கருத்தில் வைத்து, இரங்கி, உன்னுடைய ஸேவா பாக்யம் கிடைக்குமாறு அருள வேணும் என நம்மாழ்வார் பிரார்த்தித்தார்.

அடுத்த பாசுரத்தில், "தென் திருநாவாய் என் தேவே" என்று பகவானை அன்புடன் அழைத்து, நான் செய்வது என்பது ஒன்றும் இல்லை. நீ ஸங்கல்பித்தால், அடியேனான என்னையும் ஒரு பொருளாக்கி, உன் பொற்றாமரை அடிகளில் சேர்த்து வைப்பாய்; நீ விரும்பாவிடில், நான் வேண்டும் கைங்கர்யமாகிய அனுக்ரஹத்தை அருளாதுமிருப்பாய். நீயோ ஸ்வதந்த்ரன். அக்ஞானம் என்ற மருள் நீங்கி, என் உள்ளக் கோயிலில் இனிதே கோயில் கொள்வதற்கான தெளிவை அளிக்கும் திருநாவாய் கோவே! எல்லாம் உன் ஸங்கல்பம் எனப் பின் வருமாறு நம்மாழ்வார் சொன்னார்:

அருளாதொழிவாய் அருள் செய்து, அடியேனைப்

பொருளாக்கி உன் பொன்னடிக் கீழ்ப் புகவைப்பாய்,

மருளேயின்றி உன்னை என் நெஞ்சத்திருத்தும்,

தெருளே தரு தென் திருநாவாயென் தேவே.

ஒன்பதாவது பாசுரத்தில், எளிதான வாக்யங்களை உபயோகப் படுத்தி, சுலபமாக தேவர்களாலும், ப்ரஹ்ம ரிஷிகளாலும் எத்தனை முயற்சி எடுத்துக் கொண்டாலும் காண முடியாத தேவாதிதேவனை, திருநாவாய் அதிபனை, மூன்று உலகங்களை ஆளும் ராஜாதி ராஜனாகவும், மூவர் முதல்வனாகவும் ஸேவித்துக் கொள்கிறார். **அந்த திருநாவாய் நாராயணன் விரும்பி நித்ய வாஸம் செய்யும் திருப்பதியை நெருங்கும் பாக்யம் கிட்டாவதவனாக நான் உள்ளேன்.** இனி, எனக்கு கிடைக்க முடியாத, அரிதான பாக்யத்தை யார் அடையப் போகிறார்களோ? யாருக்கு அத்தகைய தர்மானுஷ்டானமும், யோக்யதையும் உள்ளதோ என யோசித்தார். இக் கருத்துக்கள் கொண்ட பாசுரம் பின் வருமாறு:

தேவர் முனிவர்க்கு என்றும் காண்டற்கரியன்,

மூவர் முதல்வன் ஒரு மூவுலகாளி,

தேவன் விரும்பியுறையுந் திருநாவாய்,

யாவர் அணுகப் பெறுவார் இனியந்தோ!

இப்படி தனக்கு, திருநாவாய் என்ற க்ஷேத்ரத்தை நெருங்கும் பாக்யம் கிட்டாத போதிலும், தான் உரக்க கதற முடியாமல் இருக்க முடியவில்லை என பத்தாவது பாசுரத்தில் மாமணி வண்ணனான திருநாவாய் எம் பெருமானிடம் பின் வருமாறு கூறுனார்:

அந்தோ! அணுகப் பெறுநாள் என்றெப்போதும்,

சிந்தை கலங்கித் திருமால் என்றழைப்பன்,





கொந்தார் மலர்ச்சோலைகள் சூழ் திருநாவாய்

வந்தேயுறைகின்ற எம் மாமணி வண்ணா!

கொத்துக் கொத்தாக புஷ்பங்கள் மலர்ந்திருக்கும் குளிர் சோலைகள் உடைய திருநாவாய் திருப்பதியைப் பற்றித் தான் அருளிய பத்து பாசுரங்களை ஓதி உணர்பவர்கள், இவ்வுலகில் விசேஷ ஐச்வர்ய சம்பத்துக்களைப் பெற்று, எங்கும் நிலைத்த புகழ் உடையவராய், பல காத தூரம் நீடித்து பரிமளிக்கும் மல்லிகை மலர் போல் விளங்குவர் எனப் பின் வருமாறு சொன்னார்:

வண்ணம் மணிமாட நல் நாவாயுள்ளானை,

திண்ணம் மதிள்தென் குருகூர்ச் சடகோபன்,

பண்ணார் தமிழாயிரத்திப் பத்தும் வல்லார்,

மண்ணாண்டு மணங்கமழ்வர் மல்லிகையே.

இம்மையிலும், மறுமையிலும் ஸர்வ ஐச்வர்யங்களையும் பெற்று, இப் பாசுரங்களை அப்யஸித்ததால் ஏற்பட்ட புண்யத்தால் ஸர்வகந்தனான எம் பெருமானின் திருமுடியை அலங்கரிக்கும் மல்லிகை புஷ்பத்தைப் போல் மணம் வீசி இருப்பார்கள் என்று ஆழ்வார் அறிவித்தார். திருநாவாய் நாரண நம்பிக்கு தொண்டனாய் ஒழிந்து, நாமும் பரமபதம் அடைவோமாக!

श्री नवयोगि क्षेत्रे रक्त पङ्कज पुष्करणी तटे वेद विमानच्छायायां स्थिताय पूर्वाभिमुखाय श्रीमते पद्मावती समेत श्री नारायण (நாவாய் முகுந்த) परब्रह्मणे नमः

ஸ்ரீ நவயோகி க்ஷேத்ரே, ரக்த பங்கஜ புஷ்கரணீ தடே, வேத விமானச்சாயாயாம், ஸ்திதாய, பூர்வாபிமுகாய, ஸ்ரீமதே பத்மாவதீ ஸமேத ஸ்ரீ நாராயண (நாவாய் முகுந்த) பரப்ரஹ்மணே நமஹ

SrI navayogi kshetre, rakta pankaja pushkaraNI taTe, veda vimAnaccAyAyAm, sthitAya, pUrvAbhimukhAya, SrImate padmAvatI sameta SrI nArAyaNa (nAvAi mukunda) parabrahmaNe namaH

||சுபம்||

# Additional Reading Material:

1. Sthala Puranam from Anudinam.org

